# யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
## நாடகமும் அரங்கியலும்

| தரம் :- 10 | சுட்டெண்:- ........................................ | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01) நாடகம் என்ற சொல்லின் பழந்தமிழ் வடிவம்
1) கூத்து 2) ஆடல் 3) தொல்காப்பியம் 4) நன்நூல்

02) குழந்தை சண்முகலிங்கத்தின் முதலாவது சிறுவர் நாடகம்
1) இடுக்கண் வருங்கால் 2) பஞ்சவர்ண நரியார்
3) கூடி விளையாடு பாப்பா 4) ஒற்றுமையின் சின்னம்

03) விழிப்பு நாடக ஆசிரியர்
1) காரை சுந்தரம்பிள்ளை 2) நா. சுந்தர்லிங்கம்
3) க. சிதம்பரநாதன் 4) தே. தேவனாந்

04) நாடகம் என்பது
1) நெறியாளரின் கலை 2) நடிகனின் கலை
3) ஒப்பனையாளரின் கலை 4) மேடைமுகாமையாளரின் கலை

05) நாடகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் நாடு
1) இத்தாலி 2) இந்தியா 3) கிரேக்கம் 4) மாலைதீவு

06) தமிழ்நாட்டில் சிறுவர் அரங்கில் முனைப்புடன் செயற்படுபவர்
1) முத்துசாமி 2) வேலுசரவணன் 3) மணிரத்தினம் 4) குப்புசாமி

07) சுணைக்கேடு எனும் நாடகத்தினை நெறியாள்கை செய்தவர்
1) நா. சுந்தர்லிங்கம் 2) காரை சுந்தரம்பிள்ளை
3) தே. தேவானாந் 4) க. ரதிதரன்

08) நாடகத்தில் ஒப்பனையின் நோக்கம்
1) நடிகனின் தகுதியைக் காட்ட
2) பாத்திரத்தை அழகாகக் காட்ட
3) பாத்திரப் பண்பை முனைப்புறுத்திக் காட்ட
4) வேடிக்கைக்கு

09) காமன்கூத்து விசேடமாக எப்பிரதேசத்தில் ஆடப்படுகின்றது?
1) மட்டக்களப்பு 2) திருகோணமலை 3) முல்லைத்தீவு 4) மலையகம்

10) சிறுவர் நாடக முன்னோடி என அழைக்கப்படுபவர்
1) க. ரதிதரன் 2) தே. தேவானாந்
3) கண்ணன் 4) குழந்தை ம. சண்முகலிங்கம்

11) அண்மையில் நாடகத் திருவிழா நடாத்திய நிறுவனம்
1) திருமறைக்கலா மன்றம் 2) புத்தாக்க அரங்க இயக்கம்
3) முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 4) அரங்க செயற்பாட்டு இயக்கம்



kalvi.lk

12) கருவிசை என்பது

1) நாடகப் பின்னணி இசை

2) நாடகப் பாடலுக்கான இசை

3) நாடகக் கருவை வெளிப்படுத்தும் இசை

4) நாடகத்தினை அழகுபடுத்தும் இசை

13) அபிநயங்கள் எத்தனை வகைப்படும்?

1) 2 2) 4 3) 5 4) 6

14) ஆடை அலங்காரத்திற்கு முக்கியம் கொடுக்கும் அபிநயம்

1) ஆங்கீக அபிநயம் 2) ஆகார்ய அபிநயம்

3) வார்சிக அபிநயம் 4) சாத்வீக அபிநயம்

15) கோடை நாடகத்தின் ஆசிரியர்

1) குழந்தை சண்முகலிங்கம் 2) சிதம்பரநாதன்

3) முருகையன் 4) மகாகவி

16) நாடகத்திற்கு நிதி வழங்குபவர்

1) நெறியாளன் 2) நடிகன்

3) மேடைமுகாமையாளர் 4) தயாரிப்பாளர்

17) கலையரசு சொர்ணலிங்கத்திற்குப் புகழ் சேர்த்த பாத்திரம்

1) அரசன் 2) கூனி 3) மந்திரி 4) வேலைக்காரி

18) ஈழத்தில் யதார்த்த நாடக முன்னோடி

1) பேராசிரியர் வித்தியானந்தன் 2) பேராசிரியர் மௌனகுரு

3) பேராசிரியர் கணவதிப்பிள்ளை 4) பேராசிரியர் சிவத்தம்பி

19) V. V. வைரமுத்துவிற்கு புகழ் சேர்த்த நாடக வகை

1) நவீன நாடகம் 2) இசை நாடகம் 3) கூத்து 4) நாட்டிய நாடகம்

20) கவிதை பிறந்த கதை என்ற நாடகத்தின் ஆசிரியர்

1) கணபதிப்பிள்ளை 2) சொக்கன்

3) முருகையன் 4) மகாகவி

21) கூத்து மீட்பு பணியில் ஈடுபட்ட பேராசிரியர்

1) பேராசிரியர் சிவத்தம்பி 2) பேராசிரியர் மௌனகுரு

3) பேராசிரியர் வித்தியானந்தன் 4) பேராசிரியர் விசாகரூபன்

22) அண்மையில் இராவணேசன் கூத்தினை மேடையேற்றியவர்

1) பேராசிரியர் மௌனகுரு 2) பேராசிரியர் சபாஜெயராஜா

3) பேராசிரியர் விசாகரூபன் 4) பேராசிரியர் கணவதிப்பிள்ளை

23) பொறுத்தது போது நாடகத்தின் நெறியாளர்

1) தாசீசியஸ் 2) மௌனகுரு

3) சுந்தர்லிங்கம் 4) காரை சுந்தரம்பிள்ளை

24) நாடக அரங்க கல்லூரியை நிறுவியவர்

1) குழந்தை சண்முகலிங்கம் 2) சிவயோகன்

3) உருத்திரேஸ்வரன் 4) பற்குணம்



kalvi.lk

25) பரதர் குறிப்பிடும் ரசங்களின் எண்ணிக்கை
1) 9 2) 10 3) 8 4) 16

26) நாடகத்திற்கு மிக முக்கியமானவர்
1) மேடை முகாமையாளர் 2) ஒளி விதானிப்பாளர்
3) தயாரிப்பாளர் 4) நடிகன்

27) இசை நாடகத்தில் பயன்படும் வாத்தியம்
1) நாதஸ்வரம் 2) புல்லாங்குழல் 3) ஹார்மோனியம் 4) தவில்

28) வடமோடி பெரிதும் ஆடப்படும் பிரதேசம்
1) மட்டக்களப்பு 2) யாழ்ப்பாணம் 3) கதிர்காமம் 4) கொழும்பு

29) படச் சட்ட மேடையின் தாயகம்
1) சுவிஸ் 2) பிரான்ஸ் 3) இத்தாலி 4) கனடா

30) சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என கூறியவர்
1) அரிஸ்ரோட்டில் 2) தொம்சன் 3) அடோல்அப்பியா 4) தெஸ்பிஸ்

31) யாழப்பாணத்திற்கு சிறப்பான கூத்து
1) காந்தவராயன் 2) வடமோடி 3) வடபாங்கு 4) வாசாப்பு

32) உடக்குபாஸ் எங்கு சிறப்பாக ஆடப்படுகின்றது?
1) கொழும்பு 2) யாழ்ப்பாணம் 3) மன்னார் 4) வன்னி

33) விழிப்பு நாடகத்திற்கு பாடல் எழுதியவர்
1) மகாகவி 2) முருகையன் 3) சேரன் 4) சோமசுந்தரம்

34) இலங்கையில் ஜனாதிபதி விருதி பெற்ற நடிகன்
1) சொர்ணலிங்கம் 2) வைரமுத்து 3) பிரான்சிஸ்ஜெனம் 4) கிருஷ்ணாழ்வார்

35) வானொலி நாடகத்தின் பிரதான அம்சம்
1) பார்த்து ரசிக்கக் கூடியது 2) கேட்டு ரசிக்கக் கூடியது
3) ஒளியூட்டல் அவசியம் 4) ஒப்பனை அவசியம்

36) ஆற்றுகை எனும் சஞ்சிகையை வெளியிடும் நிறுவனம்
1) நாடக அரங்க கல்லூரி 2) திருமறைக்கலா மன்றம்
3) அரங்க செயற்பாட்டு இயக்கம் 4) அவைக்காற்றுக் கழகம்

37) கேரளாவின் விசேட ஆற்றுகை வடிவம்
1) பறைமேளக்கூத்து 2) தெருக்கூத்து
3) கதகளி 4) நடனம்

38) உலகளாவிய ரீதியில் நாடக விடயங்களை தாங்கி வரும் சஞ்சிகை
1) ஆற்றுகை 2) அரங்கம் 3) கூத்தரங்கம் 4) கட்டியம்

39) தமிழர்களின் பாரம்பரிய அரங்கு
1) வட்டக்களரி 2) சதுர அரங்கு
3) படச்சட்ட மேடை 4) தெருவெளி அரங்கு

40) வசாப்பு என்பது
1) ஆடல் கலந்த பாட்டு 2) வசனம் கலந்த பாட்டு
3) நடிப்பு கலந்த பாட்டு 4) சுவை மிகுந்த பாட்டு



kalvi.lk

## பகுதி - II

- விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01)

i) அரங்க விளையாட்டு என்றால் என்ன? (2 புள்ளி)

ii) உமக்குத் தெரிந்த அரங்க விளையாட்டு நான்கு தருக. (2 புள்ளி)

iii) அரங்க விளையாட்டு விளையாடுவதனால் நடிகனிற்கு ஏற்படும் நன்மையைத் தொகுத்துத் தருக. (8 புள்ளி)

02)

i) நாடகம் என்றால் என்ன? (4 புள்ளி)

ii) நாடகத்தின் சிறப்பியல்புகளைத் தொகுத்துத் தருக. (8 புள்ளி)

03)

i) நடிப்பு என்றால் என்ன? (2 புள்ளி)

ii) நடிப்பு வகைகள் எவை? (2 புள்ளி)

iii) நாடகத்தில் நடிகனின் முக்கியத்துவத்தினை விளக்குக. (8 புள்ளி)

04)

i) அபிநயம் என்றால் என்ன? (4 புள்ளி)

ii) நால்வகை அபிநயங்களை விளக்குக. (8 புள்ளி)

05)

i) ஒப்பனை என்றால் என்ன? (4 புள்ளி)

ii) ஒப்பனைக்குப் பயன்படும் பொருட்கள் 3 தருக. (4 புள்ளி)

iii) நடிகன் பாத்திர சித்தரிப்பை மேற்கொள்வதற்கு ஒப்பனை எவ்வாறு உதவுகின்றது? (4 புள்ளி)

06)

i) விமர்சனம் என்றால் என்ன? (2 புள்ளி)

ii) நீர் அண்மையில் பார்த்த நாடகத்தினை விமர்சனம் செய்க. (10 புள்ளி)

07) சின்னத்திரை (தொலைக்காட்சி) நாடகத்தினால் இன்று ஏற்படும் விளைவுகளை விளக்குக. (12 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**